**தேசிய முதியோர் செயலகம் -2022**

-----------------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய முதியோர் செயலகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, செயலகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, செயலகம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கூட்டுத்தாபனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் கூட்டுத்தாபனம்

தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயலகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் செயலகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- செயலகத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு செயலகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். அத்துடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியளவினதாக காணப்படாவிடின் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- செயலகத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- செயலகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கூட்டுத்தாபனம் இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல்

### 1.5.1 இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மை

| உரிய நியமங்களுடன் தொடர்புடன் இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் ஏற்பாடுகளுக்கு புறம்பாக முதியோர் சமூக பாதுகாப்பு நிதியத்திற்காக முதியோர் கொடுப்பனவில் இருந்து, நிதியத்தின் செலவிற்கு பெற்றுக் கொள்ள வேண்டிய பங்களிப்புத் தொகை, காசு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. இதன் காரணமாக நிதியம் ஆரம்பிக்கப்பட்ட 2016 ஆண்டு முதல் 2021 ஆண்டு திசெம்பர் 31 திகதி வரையான காலப் பகுதிக்காக ரூபா 75,431,300 இற்கான நிதியத்திற்குரிய பங்களிப்புத் தொகை கணக்கீடு செய்திருக்கவில்லை. | முன்னைய ஆண்டுகளில் நிதி அடிப்படையில் சமூக பாதுகாப்பு பங்களிப்புத் தொகை கணக்குகளில் காட்டப்பட்டிருந்த போதிலும் 2022 நிதியாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் அவை அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. ஆண்டிற்கான பங்களிப்புத் தொகை வருமானம் எனவும் பெற வேண்டிய தொகை நடைமுறை சொத்துக்கள் எனவும் வகைப்படுத்தப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது என அறிவிக்கின்றேன். | பெற வேண்டிய பங்களிப்புத் தொகைகளை கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலக்கம் 228075 கொண்ட சமூக பாதுகாப்பு நிதியத்தின் வங்கி நடைமுறைக் கணக்கில் காசேட்டில் தவறுதலாக ரூபா 163,214 இற்கான தொகையொன்று வங்கி இணக்கக் கூற்றில் முன்கொண்டு வந்து காணப்பட்டது. அந்த வைப்புச் செய்யப்படாத பணம் அல்லது பணப் பற்றாக்குறை தொடர்பாக 30 மாத காலம் கடந்திருந்த போதிலும் தீர்ப்பதற்காக நடவடிக்கை ஏதும் எடுத்திருக்கவில்லை. | இது தொடர்பாக பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்கள் போதியளவினதாக காணப்படாமை காரணத்தினால் தீர்ப்பதில் தாமதம் ஏற்பட்டது. எவ்வாறாயினும் இது தொடர்பாக விரைவாக நடவடிக்கைகள் எடுக்கப்படும் என. | இந்த தொகையினை தீர்ப்பதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பிரிவு 16(2) | மீளாய்வாண்டிற்கான செயலகத்தின் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டு நிதிக் கூற்றுக்களுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | 2022 ஆண்டிற்கான செயலாற்றுகை தற்போது தயாரிக்கப்பட்டு வருவதுடன் எதிர்காலத்தில் இந்த அறிக்கை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | சட்டத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். |

## 1.7 நிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கடந்த 07 ஆண்டு காலப் பகுதியில் வழங்கியிருந்த அரசாங்க மானியங்களை பயன்படுத்தாமல் நிதியத்தின் வங்கி நடைமுறைக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பயன்படுத்தப்படாமல் ரூபா 6,137,005 தொகை காணப்பட்டதுடன், கடந்த 07 ஆண்டு காலப் பகுதியில் ரூபா 3,201,322 முதல் ரூபா 15,001,302 வரை வீச்சில் நிதி மீதியொன்று பயன்படுத்தப்படாமல் வங்கி நடைமுறைக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. 2000 இன் 09 ஆம் இலக்க முதியோரின் உரிமைக்களை பாதுகாக்கும் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க மிகைப் பணம் தேசிய சபையினால் தீர்மானிக்கக் கூடிய விதத்தில் முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2022 ஆண்டில் அரச செலவுகள் வரையறுக்கப்பட்டமையால் சில முதியோர் நலன்புரி நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுத்த முடியாமல் இருந்த காரணத்தினால் அதற்காக கிடைத்திருந்த பணத்தில் இருந்து ஒரு தொகை இவ்வாறு வருட இறுதியில் சேமிக்கப்பட்டு காணப்பட்டது. எவ்வாறாயினும் இப் பணம் 2023 ஆண்டு ஆரம்பத்தில் நிகழ்ச்சித் திட்டங்களுக்காக செலவிடப்பட்டது என கருணையுடன் அறிவிக்கின்றேன். | திறைசேரியினால் வழங்கப்படுகின்ற ஏற்பாடுகள் ஆக்கபூர்வமான விடயங்களுக்காக ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 213,698 இற்கான பற்றாக்குறை ஒன்று காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 841,077 தொகையாக இருந்தது. அதன் படி நிதி விளைவுகளில் ரூபா 627,379 இற்கான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. இந்த முன்னேற்றத்திற்கு ஊழியர் செலவு குறைவடைதல் முக்கியமான காரணமாக இருந்தது.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | குறைந்த வருமானமுடைய முதியோரின் விஷேட மற்றும் அவசர சந்தர்ப்பங்களில் சுகாதார, போசாக்கு மற்றும் பாதுகாப்பு செலவுகள் மேற்கொள்ளல் மற்றும் முதியோர்களின் நலன்புரியினை குறிக்கோளாகக் கொண்ட முதியோர் கொடுப்பனவு பெற்றுக் கொள்ளும் நலன்பெறுவோரிடம், அந்த நலன்பெறுவோர்களிடம் மாதாந்தம் ரூபா 100 வீதம் முதியோர் கொடுப்பனவில் இருந்து அறவீடு செய்து முதியோர் சமூகப் பாதுகாப்பு நிதியம் நிறுவுதல் மற்றும் பேணிச் செல்வதற்காக பாராளுமன்றத்தில் அங்கீகாரம் பெற்று அரச வர்த்தமானியில் வெளியிட்டு பாராளுமன்ற சட்டம் ஒன்றின் மூலம் சட்ட ரீதியான தன்மையை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | முதியோர் பாதுகாப்பு நிதியம் நிறுவுவதற்காக முன்னோடியாகவுள்ள 2000 இன் 09 ஆம் இலக்க முதியோரின் உரிமைகளை பாதுகாக்கும் சட்டம் பாராளுமன்றம் சட்டரீதியான வரவேற்பு கிடைத்திருப்பதன் மூலம் இந்த நிதியத்தின் செல்லுபடியாகும் தன்மை சட்டரீதியான தன்மை மற்றும் வெளிப்படைத் தன்மை வெளியிடப்பட்டுள்ளது. | பாராளுமன்ற சட்டம் ஒன்றின் மூலம் சட்டரீதியான தன்மையை ஏற்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | முதியோர் சமூகப் பாதுகாப்பு நிதியம் ஆரம்பித்தல் மற்றும் பேணிச் செல்வதற்காக செலுத்தப்படுகின்ற முதியோர் கொடுப்பனவில், 2016 ஜனவரி முதல் 2021 திசெம்பர் 31 திகதி வரை காலப் பகுதிக்குரிய ரூபா 2,902,192,100 தொகை பெற்றுக் கொள்ள வேண்டியிருந்த போதிலும், ரூபா 2,826,192,800 தொகை மாத்திரமே அறவீடு செய்யப்பட்டிருந்தது. மீதியான ரூபா 75,999,300 தொகைக்கான நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு போதியளவு நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை. | அவ்வாறு மாதாந்தம் தணிப்பு செய்யப்படும் தொகையினை அனுப்பாத, கொடுப்பனவுகளை தாமதிக்கும் அலுவலகங்களுக்கு நினைவூட்டல் அனுப்பப்பட்டுள்ளதுடன், 2022 ஆண்டு தொடர்பாக இது வரை 02 பிரதேச செயலகங்கள் தவிர மீதித் தொகை முழுவதும் அறவீடு செய்யப்பட்டுள்ளது. | நிலுவைத் தொகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | முதியோர் சமூக பாதுகாப்பு நிதியத்திற்கு சேகரிக்கப்படும் பணம் முதியோர்களின் நலன்புரி, உரிமைகளை மேம்படுத்தல், முதியோரை வலுப்படுத்தல், பாதுகாத்தலுக்கான நிதியத்தின் கருமங்களை நிறைவேற்றுவதற்காக 2017 ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை 06 வருட காலப் பகுதியில் நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டுள்ள தொகை ரூபா 444.48 மில்லியன் முதல் ரூபா 546.42 மில்லியன் வரையான வீச்சினை பெற்றிருந்த போதிலும் அக் காலப் பகுதியில் செலவுகள் மேற்கொள்ளப்படாமல் தடுத்து வைக்கப்பட்ட தொகை ரூபா 444.48 முதல் ரூபா 202 மில்லியன் தொகை வரையான வீச்சில் காணப்பட்டது. | சமூக பாதுகாப்பு நிலையத்தின் ஆரம்ப செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டு 2019 ஆண்டில் அனுமதிக்கப்பட்டிருந்தமையால் 2017, 2018 ஆண்டுகளில் அந்த நிதியத்திற்குரிய முதியோர் நலன்புரி நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் 2020 மற்றும் 2021 ஆண்டுகளில் காணப்பட்ட கொவிட் தொற்றுநோய் நிலைமை மற்றும் 2020 ஆண்டில் நிலவிய பொருளாதார சிக்கல்களின் முன்னிலையில் திறைசேரி செயலாளரினால் வெளியிடப்பட்டிருந்த 03/2022 சுற்றறிக்கையின் படி நிகழ்ச்சித் திட்டங்கள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டு இருந்தமையால் சமூக பாதுகாப்பு நிதியத்தின் நிகழ்ச்சித் திட்டங்களும் 2022 ஏப்ரல் 26 திகதியின் பின்னர் நடைபெறவில்லை. | நிதியத்தின் கருமங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | 2018 – 2022 இடைப்பட்ட 05 ஆண்டு பகுதிகளில் முதியோர் சமூக பாதுகாப்பு நிதியம் பெற்றிருந்த பங்களிப்புத் தொகை முதியோருக்கு நலன்கள் வழங்குவதற்காக பயன்படுத்தாமல் ரூபா 1,476.15 மில்லியன் முதல் ரூபா 2,941.70 தொகைக்கு இடைப்பட்ட தொகையொன்று நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. அதன் படி பலவருட காலமாக முதியோர் சமூகப் பாதுகாப்பு நிதிய பிரமாணங்களுக்கு இணங்க, நிதியத்தின் கருமங்கள் நிறைவேற்றுவதற்காக ஈடுபடுத்தப்படாமல் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. | மிகைப் பணம் தேசிய சபையின் பூர்வாங்க அங்கீகாரத்துடன் அரச வங்கிகளில் கூடிய வட்டி சதவீதம் ஒன்று வழங்குகின்ற வங்கியில் விஷேட வட்டி சதவீதம் (சாதாரண வட்டி சதவீதத்தை விட கூடிய) கீழ் இந்த முதலீடு மேற்கொள்ளப்பட்டு இருந்தது எனவும் அவற்றிலிருந்து கிடைக்கும் வட்டி வருமானத்தின் மூலம் நிதியம் மேலும் வலுப்படுத்தப்பட்டுள்ளது என கருணையுடன் அறிவிக்கின்றேன். | பங்களிப்புத் தொகையின் முதியோருக்கு நலன்கள் வழங்கி மீதியை மாத்திரம் முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூகப் பாதுகாப்பு அமைச்சுக்கு சொந்தமான ஜீப் வண்டி ஒன்று அந்த அமைச்சில் ஓடிய காலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டிருந்த | இந்த மொன்டெரோ வண்டி தேசிய முதியோர் செயலகத்தின் தேக்க வாகனமாக பெற்றுக் கொள்ளப்பட்டது எனவும் | செலவுகளை மீளளிப்பு செய்துகொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திருத்த வேலைக்காக செயலகத்தினால் முறைசாரா விதமாக ரூபா 1,585,521 தொகை மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் போதியளவாக ஓட்டத்தில் ஈடுபடுத்தியதாக ஜீப் வண்டியை தடுத்துக் கொள்வதற்கு அல்லது செலவிடப்பட்ட திருத்த வேலைச் செலவினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் ஜீப் வண்டியை திருப்பி ஒப்படைப்பதன் மூலம் செயலகத்திற்கு ரூபா 1,585,521 இற்கான நட்டம் ஒன்று ஏற்பட்டிருந்தது. 03 வருடங்களுக்கு அண்மித்த காலம் கடந்திருந்த போதிலும் செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்ட செலவினை மீளளிப்புச் செய்துகொள்வதற்கு முடியாமல் இருந்தது. | பின்னர் மகளிர் சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூகப் பாதுகாப்பு செயலாளரின் ஆலோசனையின் படி அந்த அமைச்சுக்கு வாகனம் திருப்பி ஒப்படைக்கப்பட்டது. 2021 ஜனவரி 27 திகதி செலவிடப்பட்ட பணத்தினை விரைவாக மீளளிப்புச் செய்யும் படி அறிவித்து அமைச்சுக்கு கடிதம் ஒன்றும் அனுப்பப்பட்டதுடன், இது வரை அதற்கான பதில் கிடைத்திருக்கவில்லை என அறிவிக்கின்றேன். | |

### 3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2000 இன் 09 ஆம் இலக்க முதியோரின் உரிமைகளை பாதுகாக்கும் சட்டத்தின் 13 ஆவது பிரிவின் ஏற்பாடுகளின் படி நிச்சயிக்கப்பட்ட, சரியான மற்றும் ஆக்கபூர்வமான தீர்மானம் எடுப்பதற்காக முதியோரின் தகவல்கள் அடங்கிய உரிய முறையில் தயாரிக்கப்பட்ட நாளதுவரை ஆக்கப்பட்ட தரவு முறைமையொன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த நிறுவனத்தின் உத்தியோகபூர்வ இணைய தளத்தில் என்னால் வெளியிடப்பட்ட மென்பொருள் முறைமையொன்று ஊடாக சாதனைபடைத்த முறை ஊடாக ரூபா 2,000 கொடுப்பனவு தொடர்பாக பிரதேச செயலக மட்டத்தில் நாளதுவரை ஆக்கப்படும் தரவு தகவல்கள் முறைமையொன்று உள்ளீடு செய்யப்பட்டுள்ளது. அது தவிர கணக்காய்வினால் சுட்டிக் காட்டப்பட்டிருந்த முதியோரின் தகவல்கள் அடங்கிய தரவு முறையொன்று தயாரிப்பதற்காக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கின்றேன். | முதியோரின் தகவல்கள் அடங்கிய தரவு முறைமையொன்று தாயரிப்பதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்கள் செயற்படுத்துவதன் ஊடாக முதியோரின் உரிமைகளை பாதுகாத்தல், தன்னிரைவு, தன்மதிப்புகளை பாதுகாத்தல் ஆகிய பிரதான பணிப்பொறுப்புக்கள் | அப்போது நாட்டில் நிலவிய கொரோன தொற்றுநோய் நிலைமை மற்றும் எரிபொருள் நெருக்கடி காரணமாக அரசினால் எடுக்கப்பட்ட கொள்கைகளின் கீழ் ஆண்டின் | பிரதான பணிப் பொறுப்புக்கள் ஆக்கபூர்வமாக நிறைவேற்றப்பட்டுள்ளனவா என தொடர்பாக |

| | | | |
|---|---|---|---|
| | வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டுள்ளனவா என மதிப்பாய்வு செய்தல் மற்றும் பின்தொடர் நடவடிக்கை மேற்கொள்வதற்கு உரிய கிரியைகள் திட்டமிடப்பட்டு செயற்படுத்துவதில் மீளாய்வாண்டின் போதும் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | போது பின்தொடர் நடவடிக்கை மேற்கொள்ளல் வரையறுக்க நேரிட்டிருந்தது. | மதிப்பாய்வு செய்தல் மற்றும் தொடர்செயல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | முதியோர்களுக்கான தேசிய கொள்கை தயாரிப்பதற்கு 2016 ஆண்டின் போது அரச வருடாந்த மதிப்பீட்டு ஏற்பாடுகளின் மீது ரூபா 4,245,807 தொகையில் ரூபா 2,438,715 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் தேசிய கொள்கை தயாரித்தல் அலுவல்கள் இதுவரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. மீதியாகிய ரூபா 1,807,092 தொகைக்கான பணம் பொதுவைப்புக் கணக்கில் சுமார் 06 வருடங்கள் காலம் முதல் விளைவற்று தடுத்து வைக்கப்பட்டிருந்தது. | 2016 ஆம் ஆண்டின் வரைபு தயாரிக்கப்பட்ட முதியோருக்கான கொள்கையில் அடங்கியுள்ள விடயங்கள் 2022 ஆண்டில் திறன்முறைசார் திட்டத்தின் படி தயாரிக்கப்பட்ட முதியோருக்கான கொள்கைகள் அடங்கிய புதிய கொள்கைகள் தயாரிக்கும் படி 2023 மே 29 திகதி நடைபெற்ற கூட்டத்தில் ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது. அதன் படி மீண்டும் தயாரிக்கப்பட்ட கொள்கைக் தொகுதி தேவையின் நிமித்தம் மாற்றங்கள் மேற்கொண்டு வருகின்றது. | முதியோர்களுக்கான தேசிய கொள்கை தயாரிப்பதை விரைவுபடுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | 70 வயதை விட கூடிய குறைந்த வருமானம் பெறும் முதியோருக்கு ரூபா 2,000 இற்கான மாதாந்த கொடுப்பனவு ஒன்று செலுத்தும் போது கொடுப்பனவு பெறுவோன் தொடர்பான தகவல்கள் அடங்கிய அறிக்கை முதியோர் செயலகத்தினால் பேணிச் சென்றிருக்காததுடன், கொடுப்பனவு பெறுவோர்களின் எண்ணிக்கை, செலுத்திய கொடுப்பனவின் பெறுமதி மற்றும் மாதத்தில் கொடுப்பனவு செய்யப்படாத நலன்பெறுவோர் தொடர்பான விபரங்கள் ஆகியவை அடங்கிய தரவு முறைமை ஒன்று தயாரிக்கப்பட்டு நாளதுவரை ஆக்கப்பட்டு பேணிச் செல்வதற்காக முதியோர் செயலகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் கணக்காய்வினால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளவாறு நடவடிக்கை எடுக்கப்படும் என கருணையுடன் அறிவிக்கின்றேன். | மாதாந்த கொடுப்பனவுகள் செலுத்தும் போது கொடுப்பனவு பெறுவோர்கள் தொடர்பாக தகவல்கள் அடங்கிய அறிக்கை பேணிச்செல்ல வேண்டும். |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சிரேஷ்ட தொகுதியின் பதவியணியை சேர்ந்த உதவிப் பணிப்பாளர் (அபிவிருத்தி), உதவிப் பணிப்பாளர் (நிருவாகம்), சட்ட உத்தியோகத்தர், உதவிப் பணிப்பாளர் (தகவல்கள் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்) ஆகிய பிரதான பதவிகளில் நீண்ட காலமாக வெற்றிடங்கள் காணப்பட்டதுடன், கணக்காளர் பதவியில் பதில் கடமை அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டிருந்தது. | தேசிய முதியோர் செயலகத்திற்காக 2009 ஒக்தோபர் 22 திகதி பதவியணியினர் முதலாவது அங்கீகரிக்கப்பட்டிருந்தது, குறிப்பிட்ட பதவிகளுக்காக 2011 ஜனவரி 28 திகதி ஆட்சேர்ப்பு நடைமுறை அங்கீகரிக்கப்பட்டிருந்தது. பணிப்பாளர், உதவிப் பணிப்பாளர் (அபிவிருத்தி), கணக்காளர் மற்றும் நிருவாக உத்தியோகத்தர் ஆகிய பதவிகளுக்காக விடுவிப்பு அடிப்படையில் அல்லது பதில் கடமை அடிப்படையில் அல்லது கடமைகளை அணவல் செய்யும் அடிப்படையில் இடையிடையே வரிசை அமைச்சினால் நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | நீண்டகால வெற்றிடங்கள் காணப்படும் பிரதான பதவிகளுக்காக ஆட்சேர்ப்பதற்கு முகாமைத்துவ சேவை திணைக்களத்திடம் விண்ணப்பிக்க வேண்டும். |

**4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 செயல் நடவடிக்கைத் திட்டம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்காக திறைசேரி ஏற்பாடுகளின் கீழ் முதியோர் நலன்புரி நிகழ்ச்சித் திட்டங்களுக்காக ரூபா 50 மில்லியனுக்கான ஏற்பாடுகளில் ரூபா 20.525 மில்லியன் தொகை முதியோருக்காக செயற்படுத்தப்படும் நலன்புரி நிகழ்ச்சித் திட்டங்களுக்காக பயன்படுத்தப்படாமல் நிறுவனத்தின் செலவுகளுக்காக மாற்றப்பட்டிருந்தது. | 2022 ஆண்டின் போது அரச செலவுகள் வரையறுத்தல் மீது வருட ஆரம்பத்தில் திட்டமிட்டவாறு சில முதியோர் நலன்புரி நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுத்தும் இயலுமை வரையறுக்கப்பட்டிருந்தது. அதே போல் அத்தியவசிய செலவுகள் அதிகரித்திருந்தமையால் முதியோர் செயலகத்தை நடாத்திச் செல்வதற்காக தாபனச் செலவுகளுக்காக வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாடுகள் போதியளவினதாக காணப்படாமையால் முதியோர் நலன்புரி நிகழ்ச்சித் திட்டங்களின் மிகை ஏற்பாடுகள் மாற்றிக் கொள்ளல் | நிருவாகச் செலவுகளை வரையறுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | மேற்கொள்ளப்பட்டிருந்தது என அறிவிக்கின்றேன். | |
| (ஆ) | திறைசேரியின் ஏற்பாடுகளை பயன்படுத்தி மீளாய்வாண்டின் போது முதியோர் நலன்புரி அலுவல்களை செயற்படுத்துவதற்காக திருத்திய செயல் நடவடிக்கை திட்டம் உட்படுத்தப்பட்டிருந்த செயற்பாடுகளில் 03 பிரதான செயற்பாடுகளின் முன்னேற்றம் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | 2022 ஆண்டின் போது அரச செலவுகள் வரையறுத்தல் மீது வருட ஆரம்பத்தில் திட்டமிட்டவாறு சில முதியோர் நலன்புரி நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுத்தும் இயலுமை வரையறுக்கப்பட்டிருந்தது. | திட்டத்தின் படி எதிர்பார்த்த கருமங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | திட்டத்தின் செயற்திட்டங்கள்/ செயற்பாடுகள் மீண்டும் மீளாய்வு செய்து காலரீதியாக திருத்தப்பட வேண்டிய செயற்திட்டங்கள்/ செயற்பாடுகள் காணப்படின் அவற்றை இனங்கண்டு 2022 மதிப்பீடு தயாரிக்கும் போது திருத்தங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் வருடம் முடிவடைய சில நாட்களுக்கு முன்னர் திருத்தங்கள் சமர்பித்தல் ஆக்கபூர்வமானது அல்ல என அவதானிக்கப்பட்டது. அதே போல் 2022 ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டமும் இலக்காகிய செயலாற்றுகையை நெருங்குவதற்காக முடியாமல் போனமையால் செயல் நடவடிக்கைத் திட்டத்தை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | 2022 ஏப்ரல் 26 திகதி நிதியமைச்சினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையின் படி அரச செலவுகளை கட்டுப்படுத்துவதற்காக நிகழ்ச்சித் திட்டங்கள் நிறுத்தப்பட்டன. பின்னர் வருட இறுதியில் பெற்றிருந்த கோரிக்கைகளின் அடிப்படையில் வேலைத் திட்டங்களின் தேவைப்பாடுகள் மீது செயல்நடவடிக்கைத் திட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | செயல்நடவடிக்கைத் திட்டம் காலத்துக்கு உகந்தவாறு திருத்தங்கள் செய்யப்பட வேண்டும். |